மஞ்சள் மற்றும் இஞ்சி

**1.தண்டுத் துளைப்பான்:** ***கோனோகீத்தீஸ் (டைக்கோகுரோசிஸ்) பங்டிஃபெராலிஸ்***

**சேதத்தின் அறிகுறிகள்**

- தாக்கப்பட்ட போலித் தண்டுகளின் இலைகள் மஞ்சளாக மாறி காய்ந்துவிடுகின்றன.
- புழுக்கள் போலித்தண்டுகளை குடைந்து தாக்கி கழிவுப் பொருட்களை வெளித்தள்ளியிருக்கும். மையக் குருத்து இலைகள் வாடியும், மஞ்சளாக மாறி இருக்கும்.

**பூச்சியின் விபரம்**

**முட்டை:** இளஞ்சிவப்பு, தட்டையான நீள்வட்ட வடிவில் தனியாகவோ அல்லது குவியலாகவோ இளம் தளிர்களின் மீது இடும்.

**புழு:** இளஞ்சிவப்பு உடலையும், தலை மற்றும் முன் மார்புக்கவசப் பகுதியும் பழுப்பு நிறத்திலும், உடலில் சிறு மெல்லிய உரோமங்களையும் கொண்டிருக்கும்.

**கூட்டுப்புழு:** பட்டுக்கூட்டில் தண்டில் உள்ள இலைகளில் இருக்கும்.

**பூச்சி:**

- அந்துப்பூச்சி சிறியதாக இருக்கும்.
- மஞ்சள் நிற இறக்கையில் கருப்பு புள்ளிகளுடன் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- மாலத்தியான் @ 0.1 சதவிகிதம் 30 நாட்கள் இடைவெளியில் ஜீலையிலிருந்து அக்டோபர் வரை தெளிக்கவேண்டும்.

**2.கிழங்கு செதில் பூச்சி:** ***ஆஸ்பிடியோட்டஸ் ஹார்ட்டியை***

**சேதத்தின் அறிகுறிகள்**

- செடி வாடும்
- வெண்ணிற செதில் பூச்சிகளில் குருத்துகளிலும், கிழங்குகளிலும் காணப்படும்.
- கிழங்குகள் சுருங்கி விடும்.

**பூச்சியின் விபரம்**

- பெண் செதில் பூச்சி சிறிய வட்ட வடிவ, இளம் பழுப்பு நிற ஆமை ஓடு போன்ற அமைப்புடையவை.
- ஆண் செதில்பூச்சி ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். கண்ணாடி போன்ற இறக்கையுடையது. தலை, மார்பு மற்றம் வயிறு எனத் தனித்தனிப் பாகங்கள் தெளிவாகக் காணலாம்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- செதில் பூச்சிகள் தாக்கப்பட்ட கிழங்குகளை சேமிக்கக்கூடாது.
- பூச்சித் தாக்கிய இலைகளைச் சேகரித்து அழிக்கவேண்டும்.
- தரமான, பூச்சிகளற்ற கிழங்குகளை தேர்வு செய்து நடவேண்டும்.
- விதைக்கு பயன்படுத்தும் கிழங்குகளை 0.075 சதவிகிதம் குவினால்ஃபாஸ் கரைசலில் 20-30 நிமிடம் ஊறவைத்து பின்னர் நிழலில் உலர்த்தி நட வேண்டும்.
- எக்டருக்கு 10 டன் நன்கு மக்கிய செம்மறி ஆடு எரு அல்லது கோழி எருவை இரு முறைப்பிரித்து மண்ணில் கலக்கவேண்டும். இதைத் தொடர்ந்து டைமீதோயேட் மண்ணில் கலக்கவேண்டும்.

**3.இலைச்சுருட்டுப் புழு: *உடாஸ்பஸ் ஃபோலஸ்***

**சேதத்தின் அறிகுறிகள்**

- புழுக்கள் இலைகளை மடித்து அதன் உள்ளிருந்து கொண்டு சாப்பிடும்.

**பூச்சியின் விபரம்**

புழு: பச்சை நிறமானவை, தலைப்பகுதி -கருப்பு நிறத்தில் இருக்கும்.

பூச்சி: வண்ணத்துப்பூச்சிகள் ஊதா கலந்த கருப்பு நிறமானவை.

- முன்இறக்கையில் - வெண்ணிறப்புள்ளிகள் இருக்கும்.
- பின்இறக்கையில் - பெரிய வெண்திட்டு காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- கார்பரில் 0.1 சதவிகிதம் அல்லது டைமீதோயேட் 0.05 சதவிகிதம் தெளிக்கவும்.

**4.இலைப்பேன்: பங்கீட்டோதிரிப்ஸ் இண்டிகஸ்**

**சேதத்தின் அறிகுறிகள்**

- இலையின் சாறு உறிஞ்சப்படுவதால் இலை நுனியிலிருந்து சுருண்டு காய்ந்துவிடும்.

**பூச்சியின் விபரம்**

- வளர்ந்த பூச்சிகள் கருமையானதாகவும், சீப்போன்ற இறக்கையும் கொண்டிருக்கும்.
- இளம் பூச்சிகள் மஞ்சள் நிறமாக இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- குவினால்ஃபாஸ் 0.025 சதவிகிதம் அல்லது ஃபென்தியான் (அல்லது) ஃபசாலோன் 0.07 சதவிகிதம் தெளிக்கவேண்டும்.